RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1118

OPEN ACCESS

# பாரதியின் தத்துவ சிந்தனைகள்

**க. முத்து இலக்குமி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசுக்கல்லூரி, சித்தூர், பாலக்காடு-678104, கேரளம், இந்தியா

# Philosophical Thoughts of Bharathi

**G. Muthulakshmi** [a, *]

[a] Department of Tamil, Government College, Chittur, Palakkad–678104, Kerala, India

* Corresponding Author: muthusenthil2010@gmail.com

Received: 12-08-2021
Revised: 23-07-2022
Accepted: 28-07-2022
Published: 10-09-2022

Check for updates

**ABSTRACT**

In the explanation of the universe, the five gods, the planets, man, and the soul, science and philosophy are mutually exclusive. From time to time, scholars, poets, and mystics have been explaining philosophy depending on their field of knowledge. Philosophy is always man's search object and as such is the theme of the poetry of poets. Mahakavi Bharathiyar was the source of innovation in poetry and revolution in society, as well as giving richness and impetus to the development of Tamil literature in the twentieth century. It is noteworthy here that the poet who was a revolutionary who gave rise to the concept of innovation is also a patron who praises nature and God. In the works of Bharathiyar, who sees nature as God and God as an expression of nature, philosophy is woven through the leaves. This article explains the philosophical ideas expressed in Bharathiyar's works in terms of nature, God, and man and also in terms of Siddhas' doctrine.

**Keywords:** Mahakavi Bharathiyar, Siddhas Doctrine, Philosophical Thoughts

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வளமும் வனப்பும் அளித்ததோடு கவிதையில் புதுமைக்கும் சமுதாயத்தில் புரட்சிக்கும் வித்திட்டவர் மகாகவி பாரதியார். புதுமைக் கருத்துக்கு வித்திட்ட புரட்சியாளராக இருந்த கவி இயற்கையையும் இறையையும் போற்றிப் பாதுகாக்கும் புரவலனாகவும் விளங்குவது இங்கு குறிப்பிடத்தக்கது. எளிமையும் இனிமையும் கொண்ட பாரதியின் படைப்புகளில் வெளிப்படும் தத்துவ சிந்தனைகளை, பின்வரும் நான்கு பொருண்மைகளில் விளக்கலாம்.

1. இயற்கை சார்ந்த சிந்தனைகள்
2. இறைமை சார்ந்த சிந்தனைகள்
3. மனிதவாழ்வு சார்ந்த சிந்தனைகள்
4. சித்தர்களின் தத்துவக்கோட்பாடு

## இயற்கை சார்ந்த சிந்தனைகள்

வாழ்க்கையையும் இயற்கையையும் ஒன்றாகக் கண்ட இயற்கைவாதி பாரதி. காக்கை குருவி எங்கள் சாதி, நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம், நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை என்று இயற்கையைத் தம்மோடு இணைத்துக் கண்டவர். இயற்கை பாரதிக்கு வாழ்வின் அடிப்படை

நாதம், வழிபடும் தெய்வம், கற்பிக்கும் ஆசிரியன், அன்பு செய்யும் தாய், ஆதரிக்கும் நண்பன், நேசிக்கும் காதலன், துள்ளி விளையாடும் குழந்தை என மனித மகிழ்விற்குரிய அத்துணை அவதாரங்களையும் எடுத்திருப்பதை அவர் படைப்புக்கள் உணர்த்துகின்றன. மேலும் 'இயற்கையின் அனைத்து நிகழ்வுகளையும் சக்தியின் வடிவமாகக் கண்டார்' இவ்வுலகம் இனியது, இதிலுள்ள 'வான் இனிமையுடைத்து' எனத்தொடங்கும் வசன கவிதை ஐம்பூதங்களே இவ்வுலகின் அடிப்படை என்பதை உணர்த்துகின்றது. புல்லை நகையுறுத்தி பூவை வியப்பாக்கி, மண்ணைத்தெளிவாக்கி விந்தை செய்யும் சோதியினை என வரும் குயில்பாட்டும், கணந்தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும் எனவரும் பாஞ்சாலி சபத அடிகளும் 'நிற்பதுவே நடப்பதுவே நீங்கள் எல்லாம் சொப்பனங்கள் தானோ வெறும் தோற்ற மயக்கங்களோ' என்ற பகுதியும் பாரதியின் இயற்கை தத்துவத்தைத் தெற்றென விளக்குவன. உலகத்தில் தோன்றும் அனைத்து நிகழ்வுகளும் இயற்கையின் விந்தையாக, வெளிப்பாடாகக் காண்கிறார் கவிஞர். எனவேதான் "இயற்கையின் குணங்களால் செய்கையெல்லாம் நடப்பன என்ற பகவத் கீதை வரிகளை வழிமொழிகின்றார்" (Jayakanthan, Balasubramaniyam, 2015). மலைகளின் கூட்டமும் மரங்களின் பசுமையும் காக்கையின் சிறகும் கேட்கும் ஒலிகளும் மெய்பெறும் உணர்வுகளும் நீயாகவே விளங்குகின்றாய் என்று இயற்கையின் தத்துவத்தை எளிமையாக எடுத்துரைக்கின்றார். ஐம்பூதங்களில் காற்றே உயிராக விளங்குவதைப் பின்வருமாறு விளக்குவார். "உயிர்தான் காற்று, பூமித்தாய் உயிரோடிருக்கிறாள், அவளுடைய மூச்சுத்தான் பூமிக்காற்று, காற்றே உயிர் அகில உலகமும் உயிர் நிலையே. தோன்றுதல், வளர்தல், மாறுதல், மறைதல் எல்லாம் உயிர்ச்செயல்" என்று தனது சும்மா என்னும் கதையில் பதிவு செய்கின்றார் (Bharathiyar, 1994).

## இறைமை சார்ந்த சிந்தனைகள்

இறைவனின் தோற்றமாக இயற்கையைப் போற்றிய பாரதிபரம்பொருள் ஒன்றே என்று பல இடங்களிலும் வலியுறுத்துகின்றார். அந்தப் பரம்பொருளை சக்தியாக, கண்ணனாக, பஞ்சபூதங்களாக, நவ கோள்களாக வெவ்வெறு வடிவங்களில் ஒவ்வொன்றின் இயக்கத்திலும் உணர்ந்தார். 'இறைவன் இறைவி இரண்டும் ஒன்றாகித் தாயாகித்' எனத்தொடங்கும் விநாயகர் நான்மணிமாலை இறைசக்தி பற்றிய பாரதியின் கோட்பாட்டை தெற்றென உணர்த்துகின்றது. இவ்வுலகில் நடைபெறும் அனைத்து செயல்களும் சக்தியின் செயல்களாகவே காண்கிறார் பாரதி. உலகத்துச் செய்கைகளெல்லாம் தெய்வத்தின் செய்கைகளே. உலகத்தின் நடைகளிலும் வீதிகளிலும் தெய்வத்தை உணர வேண்டும். இந்த வழியறியாதோர் உலகத்திற்கு பயப்படுகிறார்கள் என்னும் (Jayakanthan, Balasubramaniyam, 2015).

"ஒன்று பரம்பொருள் நாமதன் மக்கள்" என்று பரம்பொருளை உலக இயக்க சக்தியாகக் கொள்கின்றார் (Bharathiyar, 1994). அந்தப் பரம்பொருள் இன்றி உலகினில் சக்தி வேறில்லை என்பதை,

"வைமெலாந் தெய்வ வலியின்றி வேறில்லை"

என்கின்றார் (Bharathiyar, 1994). உலகில் அனைத்திற்கும் முதலாகப் போற்றப்படும் தெய்வம் சிவமே, அந்த சிவம் என்பது தெளிந்த நல் அறிவே என்னும் மகாகவி மனிதர்களை வேற்றுமைப் படுத்தும் மதவேறுபாட்டையும் வேறுபட்ட கொள்கைகளையும் கண்டிக்கின்றார். சுத்த அறிவே சிவம் என்னும் கவி,

"எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன்

என்றுரைத்தான் கண்ணபெருமான்"

என்று சிவன், கண்ணன், சக்தி என்ற பல்வேறு பெயர்களும் வடிவங்களும் காணப்பட்டாலும் மனிதனுக்கு தேவையான தெய்வம் சுத்த அறிவு ,அறிவுக் கண்கொண்டு பார்க்கும் உலகப் புரிதல் தான் ,அதுவே இயற்கை என இறைமையை வறையறுக்கின்றார் (Bharathiyar, 1994). அந்த இயற்கை உலகில் தோன்றிய அனைத்தையும் வாழவைக்கும் என்றும் நம்புகின்றார். அந்த நம்பிக்கைதான் பாரதியைப் பின்வருமாறு சிந்திக்கத்தூண்டுகின்றது.

"மரத்தினை நட்டவன் தண்ணீர் - நன்கு

வார்த்ததை யோங்கிடச் செய்வான்

சிரத்தை உடையது தெய்வம்"

என்று இந்த உலகத்தோற்றத்திற்குக் காரணமான தெய்வமே இவ்வுலகத்தைப் பாதுகாத்து வாழவைக்கும் என்கின்றார் (Bharathiyar, 1994). அந்த தெய்வம் எல்லையற்றது என்பதை, 'எல்லையில்லாப் பொருள் ஒன்று - தான், இயல்பறிவாகி இருப்பதுண்டென்றே' என்று வியந்து நிற்கின்றார். அதனால் தான்,

"மானுடர் உழாவிடினும் வித்து நடாவிடினும்

வரம்பு கட்டாவிடினும் அன்றி நீர்பாய்ச்சாவிடினும்

வானுலகு நீர்தருமேல், மண்மீது மரங்கள்

வகை வகையாக நெற்கள் புற்கள்மலிந்திருக்குமன்றே?

மனுடரே நீவிர்

என்மதத்தைக் கைக்கொண்மின்"

என தன் மதமான அன்பு செய்தலை நாமும் பின்பற்றவேண்டுகின்றார் (Bharathiyar, 1994). இறுதியாக இறை இன்னதென விளக்க முற்படுகின்றார் தம் வேள்விப்பாட்டில். அப்பாடல் பின்வருமாறு.

"இயற்கையென்றுரைப்பார் சிலர்

இணங்குமைம் பூதளென்பார்

செயற்கையின் சக்தியென்பார் - உயிர்த்

தீயென்பர் அறிவென்பர், ஈசனென்பர் (Bharathiyar, 1994)

என்று விளக்கும் பாரதி, வியப்புறு தாயாக விளங்கும் சக்தியை

பூதங்களைந்திலிருந்தெங்குங் கண்ணிற்

புலப்படும் சக்தியைப் போற்றுகின்றோம்"

என்று ஐம்பூதங்களாக இறைசக்தியைப் போற்றப் பணிக்கின்றார் (Meiyappan, 1992).

## மனிதவாழ்வு சார்ந்தசிந்தனைகள்

மானுடம் பாடவந்த மாகவிஞன், மனிதரில் ஆயிரம் சாதி - என்ற, வஞ்சக வார்த்தையை ஒப்புவதில்லை என்று சாதிப்பிரிவினை மனிதனைக் குலைக்கும் விடம் ஆகையால் தனக்கு அந்த வஞ்சகத்தோடு உடன்பாடில்லை என்கின்றார். மட்டுமன்றி,

"ஒன்றுண்டு மானிடச் சாதி -பயின்று

உண்மைகள் கண்டவர் இன்பங்கள் சேர்வார்

என்று மானிடச்சாதியின் வாழ்வின் இலக்கினை வலியுறுத்தவும் செய்கின்றார் (Bharathiyar, 1994).

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான்" (Chidambaranar Samy, 2015)

என்னும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப மக்களிடையே பிரிவென்பது செய்யும் தொழில்சார்ந்து அமைந்தது அதில் உயர்வு தாழ்வு காண்பது அறிவுடைமை ஆகாது என்ற தம் சிந்தனையை,

"தொண்டரென்றோர் வகுப்பில்லை - தொழில்

சோம்பலைப்போலிவில்லை

நாலு வகுப்பிங்கொன்றே - இந்த

நான்கினி லொன்று குறைந்தால்

வேலை தவறிச் சிதைந்தே - செத்து

சிதறிடும் மானுடர் சாதி"

என்று பதிவு செய்கின்றார் (Bharathiyar, 1994). வாழ்வில் காதல் உணர்வு அடிப்படையான ஒன்று. அதனால் தான் காதல் காதல் காதல் ,காதல் போயின் ,சாதல் சாதல் சாதல் என்று உணர்ச்சிப் பொங்கப் பாடிய பாரதியார் வாழ்வின் நிலையாமை பற்றியும் பல இடங்களில் அறிவுறுத்துகின்றார். ‘உலகெலாமொர் பெருங்கனவு', 'இன்பமும் ஓர்கணத் தோற்றம்-இங்கு, இளமையும் செல்வமும் ஓர்கணத்தோற்றம், துன்பமும் ஓர்கணத்தோற்றம், இங்கு தோல்வி முதுமை ஓர்கணத்தோற்றம் என்று வாழ்வு நிலையாமை எடுத்துரைக்கின்றார் (Bharathiyar, 1994). நிலையற்ற வாழ்வில் நிலைபெற்று வாழ தவம் செய்க ,அன்பெனும் தவம் செய்க ,அன்புடையார் இன்புற்று வாழ்வர் என்று வாழும் நெறியையும் காட்டுகின்றது பின்வரும் கவிதை,

"செய்கதவம் செய்கதவம் நெஞ்சே தவம்செய்தல்

எய்த விரும்பியதை யெய்தலாம் - வையத்தில்

அன்பிற் சிறந்த தவமில்லை அன்புடையார்

இன்புற்று வாழ்தல் இயல்பு" (Bharathiyar, 1994)

## சித்தர்களின் தத்துவக் கோட்பாடு

மனமே தெய்வம், உடம்பே கோவில், இறைவன் எங்கும் எதிலும் நிறைந்துள்ளான், என்றும் உலகப்பொருள் அனைத்தும் மாயை என்றும் இவ்வுலக நிலையை சித்தர்கள் விளக்குகின்றனர். சித்தர்களின் இறைசிந்தனைகளும் வள்ளலாரின் அன்புநெறியும் ஒருங்கமைந்த தன்மையை பாரதியார் படைப்புக்களில் காண்கிறோம். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற சித்தர்களின் கோட்பாட்டை ‘உன்னுடைய ஆத்மாவும் உலகத்தினுடைய ஆத்மாவும் ஒன்று, நீ, நான், முதலை, ஆமை, ஈ, கருடன், கழுதை எல்லோரும் ஒரே உயிர், அந்த உயிரே தெய்வம்' என்று மிக எளிமையாகத் தமது கட்டுரையில் விளக்குகின்றார் பாரதியார். நட்டகல்லைச் சுற்றி வந்து பூக்களைத்தூவி, முணுமுணு என்று மந்திரம் சொன்னால் நட்ட கல்லும் பேசுமோ, நாதன் உள் இருக்கையில் என்று சாடுவார் சிவவாக்கியார். இதனை

"மந்திரத்தை முணுமுணுத்து ஏட்டை

வரிசையாக அடுக்கி அதன்மேல்

சந்தனத்தை மலரை இடுவோர்

சாத்திரம் இவள் பூசனை அன்றாம்"

என்று வழிபாட்டு நெறியை விளக்குகின்றார் (Sethupathy, 2013). வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்றார் வள்ளலார். பாரதி அத்தகைய அன்பு பூவுலகம் எங்கும் நிறைந்துநிலைத்திருக்கவேண்டும் என்று விநாயகரை வேண்டுகின்றார்.

"பூமண்டலத்தில் அன்பும் பொறையும்

விளங்குகதுன்பமு மிடிமையு நோவுஞ்

சாவு நீங்கிச் சார்ந்த பல்லுயிரெலாம்

இன்புற்று வாழ்க"

என்று உலகிலுள்ள அனைத்து உயிர்களும் இன்புற்றிருக்க விழையும் பாரதியின் கவிதை சித்தர்களின் வாழ்வியல் நெறிப்பாட்டின் வெளிப்பாடாகவே விளங்குகின்றது (Bharathiyar, 1994). உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் என்பார் திருமூலர், கவிமணியோ இறைவனை உள்ளத்தில் காண்பயெனில் கோயில் உள்ளேயும் காண்பாய் என்பார் (Subramanian, 2000). இக்கருத்து பாரதியின்

"சிவன் நீ சக்தி உன் மனைவி

விஷ்ணு நீ லட்சுமி உன் மனைவி

பிரம்மா நீ ஸரஸ்வதி உன் மனைவி"

என்று இறைவனை வெளியே தேடாமல் தனக்குள் தன்னோடு இருப்பவர்களாக கண்டு நேசிக்க வலியுறுத்துகின்றார் (Jayakanthan, Balasubramaniyam, 2015).

## முடிவுரை

கவிதையில் சொல் புதிது, சுவை புதிது, பொருள் புதிது படைக்க வேண்டும் என்னும் பாரதி சோதிமிக்க தம் நவகவிதையால் இவ்வையந் தழைக்க புதுநெறி காட்டிய புரவலர். இந்திய விடுதலைப் போராட்டத்தில் தம் எழுதுகோலால் நாடெங்கும் எழுர்ச்சியை ஊட்டியவர். அன்பெனும் மதத்தைக் கைக்கொண்டு இயற்கையையும் இறை சக்தியையும் போற்றியவர். இவ்வுலக மக்கள் சுதந்திரராக இன்புற்று வாழத் தம் கவிதைக் களம் கொண்டு விடுதலைப் பயிருக்கு உரமூட்டியவர். உச்சி மீது வானிடிந்து வீழ்ந்தாலும் அச்சம் என்பதில்லையே என்ற பாரதியின் சொற்கள் காலத்தை வென்ற கல்வெட்டுக்கள். மனித வாழ்வின் விளங்கொணா மர்மங்களையும் இயற்கை மூலம் விளக்கிக் கொண்ட பாரதி இயற்கை தனக்கு போதிக்கும் ஆசான் என்பதை தம் கவிதைகளில் பல இடங்களில் விளக்கிச் செல்கின்றார். அனைத்தும் சக்தியின் செயல், சக்தியே இயற்கை இயற்கையே சக்தி என்பதே பாரதியின் தத்துவக்கோட்பாடு. வாழ்க! மகாகவி, வாழ்க! அவர் நன்னெறி.

## References

Bharathiyar, (1994) Bharathiar Kavithaikal, Sri Hindu Pathippagam, Chennai, India.

Chidambaranar Samy, (2015) Thirukkural Thelivurai, Arivu Publications, Chennai, India.

Jayakanthan, Balasubramaniyam, (2015) Mahakavi Bharathiyarin Katturaikal, Sakithya Academy, New Delhi, India.

Meiyappan, S., (1992) Bharathiyar Kavidhaigal, Manivaasagar Pathippagam, Chennai, India.

Sethupathy, S., (2013) Bharathi Thedalil Sila Puthiya Parimanangal, New Century Book House Pvt. Ltd, Chennai, India.

Subramanian, S. V., (2000) Tamil Ilakkiya Varalaru, Manivasagar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License